தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# அனைத்துலகத் தேர்வு

# 2011

# தமிழ்மொழி

# ஆண்டு 6

நேரம்: 150 மணித்துளிகள்

சுட்டெண்:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

மொத்தப்புள்ளிகள் : 100

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

## 1) தேர்விடை வினா - விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. தமிழிலுள்ள முதல் எழுத்துகள்

அ) 12 ஆ) 18 இ) 30 ஈ) 247

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. குறள் கூறும் உயர்ந்த பண்புகள்

அ) வீரம் காட்டிக் கொடுத்தல், கொடை
ஆ) புறங்கூறல், மானம், கொடை
இ) வீரம், மானம், புறங்கூறல்
ஈ) வீரம், மானம், கொடை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. போர்முறைக்கு மாறாக எல்லாள மன்னனைக் கொன்றவன்.

அ) கதிர்காமர் ஆ) துட்டகெமுனு
இ) கதிர்காமநாயகம் ஈ) கருணாவத்தை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. பலவின் பால் குறித்து நிற்கும் சொல்

அ) குதிரைகள் ஆ) முதியோர்
இ) குதிரை ஈ) மாந்தர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. இளமையிற் கல்வி ____________________ எழுத்து

அ) மலையில் ஆ) நீரில் இ) சிலையில் ஈ) கலையில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. தமிழரிடம் இருந்து குடியுரிமை, மொழியுரிமை, கல்வியுரிமை, வாழ்வுரிமையைப் பறித்தவர்கள்

அ) போர்த்துக்கேயர் ஆ) ஆங்கிலேயர்
இ) ஒல்லாந்தர் ஈ) சிங்களவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. சிங்கள அரசுகள் யாழ்ப்பாணத் தமிழரசுக்கு திறை செலுத்திய நூற்றாண்டு

அ) பத்து ஆ) பதினைந்து
இ) பதின்மூன்று ஈ) பதினொன்று

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. செவிவழியாகத் தலைமுறை தலைமுறையாகப் பேணப்பட்டு வருபவை.

அ) இன்னிசைப்பாடல்கள் ஆ) பக்திப்பாடல்கள்

இ) நாட்டார்பாடல்கள் ஈ) மேற்கத்தியப்பாடல்கள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. அவர்கள் என்ற சொல் குறித்து நிற்கும் இடவகை

அ) படர்க்கை ஆ) தன்மை இ) முன்னிலை ஈ) ஒருமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. மயிர்நீப்பின் வாழாக் ———————— வன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்.

அ) கரிமா ஆ) பெருமா இ) கவரிமா ஈ) அரிமா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. தமிழீழத்தின் பரப்பளவு

அ) இருபத்தையாயிரம் ஆ) பத்தாயிரம்

இ) ஐயாயிரம் ஈ) இருபதினாயிரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. 'பட்டினி கிடந்து பசியால் மெலிந்து' என்ற பாடலை எழுதியவர்

அ) உருத்திரமூர்த்தி ஆ) காசி ஆனந்தன்

இ) பாரதிதாசன் ஈ) சோமசுந்தரப்புலவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. பாரிமகளிரைக் காப்பாற்றிய புலவர்

அ) ஔவையார் ஆ) மூவேந்தர் இ) கபிலர் ஈ) வசிட்டர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. மாச்சத்து புரதச்சத்து கொழுப்புச்சத்து தாதுப்பு உயிர்ச்சத்து என்பன

அ) ஊட்டச்சத்துகள் ஆ) புரதச்சத்துகள்

இ) இனிப்புச்சத்துகள் ஈ) கனியுப்புகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. அனுப்பினான் என்பதின் எதிர்காலம்

அ) அனுப்பி விட்டான் ஆ) அனுப்புகிறான்

இ) அனுப்புவான் ஈ) அனுப்பவில்லை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. எல்லாளனின் நினைவாலயம் அமைக்கப்பட்ட இடம்

அ) அநுராதபுரம் ஆ) கண்டி

இ) கொழும்பு ஈ) மன்னார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. வல்லினம் மெல்லினம் இடையினம் என்பன

அ) முதலெழுத்துகள் ஆ) சார்பெழுத்துகள்

இ) மெய் எழுத்துகள் ஈ) ஆயுத எழுத்துகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. தாயினும் இனியது

அ) வாழிடமொழி ஆ) வேறுமொழி

இ) பிறமொழி ஈ) தமிழ்மொழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. பெயர்ச்சொல் உணர்த்துவது பெயரை வினைச்சொல் உணர்த்துவது

அ) பொருளை ஆ) இடைநிலைகளை

இ) செயலை ஈ) வேறு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. மழை யார் பொருட்டுப் பெய்கிறது

அ) நல்லோர் ஆ) உழவர் இ) மூத்தோர் ஈ) சிறியோர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. பாரி மகளிர் ஔவையாருக்கு பரிமாறிய உணவு

அ) வடை ஆ) சோறு இ) அடகு ஈ) அப்பம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. போர்த்துக்கேயர் வருகையின் போது தமிழீழத்தில் நிலவிய அரசு

அ) இலங்கை அரசு ஆ) கண்டி அரசு

இ) யாழ்ப்பாணத் தமிழ்அரசு ஈ) கோட்டை அரசு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. ஆழி என்றால்

அ) கடல்　ஆ) குளம்　இ) ஆறு　ஈ) சுனை

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

24. திருகோணமலையில் ——————த் துறைமுகம் அமைந்துள்ளது.

அ) இயற்கை　ஆ) செயற்கை　இ) பெரிய　ஈ) சிறிய

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

25. புலவோர் என்ற சொல்லின் ஒருமை

அ) புலவீர்　ஆ) புலவார்　இ) புலவர்　ஈ) புலத்தி

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

26. கன்னியாவில் காணப்படும் வெந்நீர்க் கிணறுகளின் எண்ணிக்கை

அ) மூன்று　ஆ) ஆறு　இ) ஏழு　ஈ) பத்து

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

27. ஆயுதமேந்திய விடுதலைப் போராட்டம் தொடங்கிய ஆண்டு

அ) 1981　ஆ) 1972　இ) 1948　ஈ) 1900

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

28. பன்னூறு என்பதைப் பிரித்தால்

அ) பல + நூறு　ஆ) பல் + நூறு

இ) பன் + னூறு　ஈ) பல + னூறு

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

29. தனிமரம் ——————. என்பது பழமொழியாகும்

அ) தோப்பாகாது　ஆ) தோப்பாகும்

இ) கொடியாகும்　ஈ) செடியாகும்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

30. சொல்லியத்தில் கருத்துத் தொடங்கும் இடம்

அ) பயனிலை　ஆ) செயப்படுபொருள்

இ) எழுவாய்　ஈ) அடைமொழி

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

(புள்ளிகள் 30)

## 2. பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

இன்று பொதுவாக யாழ்ப்பாணம் என்று அழைக்கப்படுகின்ற யாழ்குடாநாடு, காலத்திற்குக் காலம் ஏதோ கரணியங்களால் (காரணம்) வெவ்வேறு பெயர்களைக் கொண்டிருந்தது. புத்தருடைய காலத்திற்கு முன்பு அல்லது அவரது சமகாலத்தில் சம்புகோளம் என அழைக்கப்பெற்றது. சம்பு என்றால் நாவல். நாவல் மரங்கள் குடாநாட்டில் அதிகம் காணப்பட்டதால் இப்பெயர் வந்திருக்கலாம். நாவல் என்ற பெயரடியைக் கொண்ட ஊர்கள் அங்கு இன்றுமுள்ளன. புத்தரின் ஈழவருகை பற்றிய செய்திகளில் அது நாகதீபம் என்று அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது அக்காலத்தில் யாழ்க்குடாவையும் வன்னியையும் நாகர் என்ற இனத்தார் ஆண்டதால் அப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். தி.பி 9ம் நூற்றாண்டுகளில், யாழ்குடாவின் மேற்குப் பகுதி மணற்றி என்று அழைக்கப்பட்டிருக்கிறது. எங்கும் மணற்குன்றுகள் நிறைந்திருந்தமையால் அப்படி அழைத்திருக்கலாம். தி.பி 10ம் நூற்றாண்டளவில் கண் பார்வையற்ற வீரராகவன் என்ற பாணனுக்கு மணற்றி, மன்னனொருவனால் பரிசளிக்கப்பட்டது. ஒரு வாய்வழிக் கதையாக இச்செய்தி வழக்கிலிருக்கிறது. அந்த யாழ்ப்பாணன் (யாழ்பாடி) காடு திருத்திக் கழனிகளாக்கி அப்பகுதியை ஆண்டான். அன்றிலிருந்து யாழ்ப்பாணம் ஆயிற்று என்பர். இப்படி யாழ்க்குடாநாட்டில் பல பெயர் மாற்றங்கள் ஏற்பட்டன. ஆனால், ஈழத்தீவின் ஈழம் என்ற பெயர் மட்டும் அன்றிலிருந்து இன்றுவரை மாறாது இருக்கிறது. ஈழம் என்றால் பொன்-தங்கம் என்றொரு பொருள் உண்டு. ஆகவே, பொன் நிறைந்த நாடாக வளஞ்சிறந்த நாடாகத் தமிழீழம் முன்னாளில் விளங்கிற்று.

1. எக் கரணியத்தால் யாழ்ப்பாணம் என்ற பெயர் உருவாயிற்று?

______________________________________________

______________________________________________

2. புத்தருடைய காலத்தில் யாழ்க்குடா நாட்டின் பெயரென்ன?

______________________________________________

______________________________________________

3. ஈழம் என்றால் பொருள் என்ன?

______________________________________________

4. இன்றைய யாழ்ப்பாண நகரின் முன்னைய பெயர் என்ன?

______________________________________________

5. நாகதீபம் என்று பெயர் உருவாகக் கரணியம் என்ன?

______________________________________________

(புள்ளிகள் 10)

## 3. பாடநூல் வினா- ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை எழுதுக.

1. தமிழர் பண்பாட்டில் மானம் என்றால் என்ன? விளக்குக.

________________________________________

________________________________________

________________________________________

2. எல்லாளனது ஆட்சியில் நாடு எப்படித் திகழ்ந்தது ?

________________________________________

________________________________________

________________________________________

3. ஆனைந்தும் எவை?

________________________________________

________________________________________

________________________________________

4. நாட்டார் பாடல் என்றால் என்ன?

________________________________________

________________________________________

________________________________________

5. சங்கிலியன் யாரால் சிறைப் பிடிக்கப்பட்டான்?

6. 'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்' என்ற பழமொழி கூறும் கருத்தை விளக்குக?

7. ஆயுதமேந்திய தமிழீழ விடுதலைப் போராட்டம் ஏன் தொடங்கப்பட்டது?

(புள்ளிகள் 10)

## 4. பாடல் வினாக்களுக்கு முழுவிடை தருக.

*மழையே மழையே நீ வந்து*
*மண்ணில் முத்தாய் விழுகின்றாய்*
*குடையே பிடித்து உனைத் தடுத்தால்*
*குமுறி நீயும் பாய்கின்றாய்*
*நாங்கள் உலகில் உயிர்வாழ*
*நாளும் உதவி செய்கின்றாய்*
*பாயும் வெள்ளமாய் நீ வந்து*
*பலரின் உயிரைப் பறிக்கின்றாய்*
*நன்மை மட்டும் நீ செய்தால்*
*நாங்கள் மகிழ்ச்சி கொள்வோமே*
*தீமையும் உன்னிடம் இருப்பதனால்*
*திருத்தி உன் செயல் அமைப்பாயா*

1. மழை எப்படி வந்து பலரின் உயிரைப் பறிக்கிறது எனக் கூறப்பட்டிருக்கிறது?

___________________________________________

___________________________________________

2. மண்ணில் மழை எதைப்போல் விழுகிறது ?

___________________________________________

___________________________________________

3. எதைச் செய்தால் நாங்கள் மகிழ்ச்சி அடைவோம் எனக் கூறப்படுகிறது?

___________________________________________

___________________________________________

4. தீமையின் எதிர்ப்பொருள் என்ன?

___________________________________________

5. எதனால் மழை குமுறிப் பாய்கிறது எனக் கூறப்படுகிறது?

___________________________________________

___________________________________________

___________________________________________

(புள்ளிகள் 10)

## 5. அனைத்து இலக்கண / மொழியியல் வினாக்களுக்கும் விடை தருக.

1. படிக்கிறான் இவ்வினைச்சொல் காட்டும் திணை, பால், இடம் என்பவற்றை எழுதுக.

______________________________________________

______________________________________________

2. பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

அவர்கள் + ஐ ______________________________

இவை + ஐ ______________________________

நீங்கள் + ஐ ______________________________

3. அறுவகைப் பெயர்களில் சினைப் பெயர், காலப் பெயர், இடப்பெயர் என்பவற்றிற்கு ஒவ்வொரு எடுத்துக்காட்டு தருக.

______________________________________________

______________________________________________

______________________________________________

4. கீழ்வரும் மெய்யெழுத்துகளின் இனப் பெயர்களை எழுதுக.

க் ச் ட் த் ப் ற் ______________________________

ங் ஞ் ண் ந் ம் ன் ______________________________

ய் ர் ல் வ் ழ் ள் ______________________________

5. கீழே தரப்பட்டுள்ள சொல், பெயராகவும், வினையாகவும் அமையுமாறு சொல்லியம் எழுதுக.

**உடை**

பெயர் :- ______________________________

வினை:- ______________________________

(புள்ளிகள் 15)

**6) பந்தியைத் தமிழ்மொழிக்கு மாற்றுக.**

Jeg er 12 år gammel. Jeg er fars og mors yndlingsbarn. Når jeg og mor er alene, synger jeg den sang mor kan bedst lide. Mor bliver meget glad. Hverdag om aftenen går far og jeg en tur sammen med hundehvalp til blomsterpark. Der spiller jeg bold sammen med mine veninder.

J'ai douze et je suis une enfant très gâtée. Lorsque ma mère et moi sommes seules à la maison, je lui chante sa chanson favorite. Elle est émerveillée par cette chanson. Tout les après-midi, mon père, mon chien et moi, nous nous promenons dans le parc. Je peux retrouver mes amis où je joue au ballon.

I am twelve years old. I'm the favourite child for my mother and father. When my mother and I are alone, I sing songs that my mother likes. My mum is very happy (amazed). Every evening, my father and I take my dog for a walk to the garden next to us. There, I play ball with my friends.

Ich bin 12 Jahre alt. Fuer meine Eltern bin ich das Lieblingskind. Wenn Mama und ich alleine sind, singe ich das Lieblingslied meiner Mama. Mama freut sich dann sehr darueber. Jeden Nachmittag gehen ich und Papa mit meinem kleinen Hund zum nahegelegenem Park. Dort spiele ich mit meinen Freundinnen zusammen Ball.

Jeg er 12 år gammel. Jeg er yndlingsbarnet til mamma og pappa. Når jeg og mamma er alene, synger jeg en sang som mamma er glad i. Mamma blir glad. Hver kveld tar jeg og pappa hundevalpen med oss og går til nærmeste parken. Der leker jeg med ball sammen med venninnene mine.

Ik ben twaalf jaar. Ik ben de enigste en liefste kind van mijn ouders. Wanneer ik alleen ben met mijn moeder, dan zing ik liedjes die zij leuk vindt Mijn moeder lacht dan van blijdschap. Elke middag wandel ik samen met mijn vader en mijn hondje richting dichts
bijzijnde park. Daar speel ik samen met mijn vriendinnen met een bal.

Ho dodici anni. Sono il cocco di mamma e papà. Quando la mamma ed io siamo soli, canto canzoni che le piacciono. Mia mamma è molto contenta ( stupita ). Ogni sera mio padre ed io portiamo il cane a passeggio nei giardini vicino a casa. Là gioco a palla con i miei amici.

Jag är tolv år gammal. Jag är min pappas och mammas kära barn. När mamma och jag är ensama brukar jag sjunga hennes favorit låtar. Mamma glädjer sig mycket åt detta. Varje eftermiddag brukar pappa och jag tillsammans med min valp gå till parken i närheten. Där brukar jag leka bollspel tillsammans med mina vänner.

(புள்ளிகள் 05)

7. கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை ஒன்று எழுதுக.

- பாரிமகளிர்
- தமிழீழநாடும் விடுதலைப் போராட்டமும்
- ஒலிம்பிக்
- நீர் சென்ற சுற்றுலா

(புள்ளிகள் 20)